

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநில மாநாட்டுக்காக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து, மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 26–11–2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, அன்பகத்தில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
சென்னை – 18.
நாள் : 23–11–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

பள்ளி-கல்லூரிகளுக்கு அருகே

# தடை செய்யப்பட்ட புகையிலை, குட்கா விற்பனைக்குத் தடை!

## அமைச்சர் மா.சுப்பிரணியன் ஆய்வு!

சென்னை, நவ.26-

தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் பள்ளிகள், கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்யப்படுவது குறித்து உணவுப்பாதுகாப்பு துறை மற்றும் காவல் துறை இணைந்து ஆய்வு மேற்கொண்டதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பி ரமணியன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்டபொருட்கள் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்வது குறித்த தடுப்புநடவடிக்கைகளை தீவிரப்படுத் தும் வகையில் உணவு பாதுகாப்பு துறை மற்றும்காவல் துறையுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடுஅரசு, உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம்2006 -ன்படி, கடந்த 23.05.2013 முதல் புகையிலை மற்றும் நிகோடினை சேர்மமாக கொண்ட உணவுப் பொருட்கள்மீதான தடையை அமுல்படுத்தியது. இதனை வருடந்தோறும் நீட்டித்து வருகிறது.

அதனடிப்படையில் 23.05.2023 முதல் இத்தடையாணையை ஓராண்டு நீட்டித்து உணவு பாதுகாப்புத் துறைஆணையர்அவர்களால் உத்திரவிட்டுள்ளது.உணவு பாதுகாப்புத்துறையின்மூலம்புகையிலை மற்றும் நிகோடினை சேர்மமாக கொண்ட உணவு பொருட்களை தயாரித்தல், சேமித்துவைத்தல், விநியோகித்தல், வாகனங்களில் எடுத்து செல்லுதல், விற்பனை செய்தல் போன்றசெயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், சென்னை மாநகராட்சிபகுதிகளில் நியமன அலுவலர், உணவுபாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களைக் கொண்டு 19குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இது போன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநகராட்சிகள், மாவட்ட அளவில் நியமன அலுவலர் மற்றும் நகராட்சிகள், வட்டார அளவில் பணிபுரியும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் காவல் துறையினருடன் இணைந்து தமிழகம் முழுவதும் 247 குழுக்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்யப்படுவது குறித்துஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

இதன்படி பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சுற்றியுள்ள உணவு வணிக நிறுவனங்கள், கடைகள், வாகனங்கள் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்கு 3 நாட்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்டபொருட்கள் கண்டறியப்பட்டால் பறிமுதல் செய்து அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

ஒரு முறைக்கு மேல் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் குற்றச்செய லில் ஈடுபடும் உணவு வணிகர்களின் உரிமம்/ பதிவுச்சான்றினைஉணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006 மற்றும் ஒழுங்குமுறைகள் 2011-ன்படி இரத்து செய்யப்பட்டுவருகிறது.

இதன் தொடர்ச்சியாக அவசர தடையாணை உத்திரவினை பெற்று தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்த கடையினை பூட்டி சீல்வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உணவு பாதுகாப்பு துறையினரால் மாவட்டம் தோறும் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்டபொருட்கள் விற்பனை செய்பவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து உரிய விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா உள்ளிட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறித்த புகார்களை TN Food Safety Consumer App வாயிலாகவும், 9444042322 என்னும் எண்ணிற்கு வாட்ஸ் அப்வாயிலாகவும், பதிவு செய்யலாம். அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு!

# சென்னை வடக்கு மாவட்டத்தில் இருசக்கர வாகனப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிவிப்பு!

சென்னை, நவ. 26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கழக இளைஞரணி செயலாளர் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை ஒட்டி , உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரியில் தொடங்கி வைத்த இருசக்கர வாகன பேரணி சென்னை வடக்கு மாவட்டத்தில் 26ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கீழ் கண்ட விபரப்பபடி பயணிக்கிறது.



இராயபுரம் 10:30 மணி

1. ராயபுரம் மேம்பாலம், 2. கல்லறை சாலை, 3. சுழல் மெத்தை (வரவேற்பு), 4. தண்ணீர் தொட்டி, 5.ராயபுரம் காவல் நிலையம் வழியாக எஸ். என். செட்டி தெரு, 6.அறிவகம்

ஆர். கே. நகர் 11.15 மணி

1. காசிமேடு சிக்னல், 2.வரதராஜ பெருமாள் கோவில் தெரு, 3.டி.எச். ரோடு, 4. லட்சுமி கோவில், 5.பெரியார் பூங்கா, 6. வெற்றி திருமண மண்டபம், 7.ஜீவா நகர், 8.அரசு கலைக் கல்லூரி, 9. வி.ஓ.சி.நகர் 5 லைட் ( வரவேற்பு ) , 10. நியூ வைத்தியநாதன் சாலை, 12. வைத்தியநாதன் மேம்பாலம், 13.நேரு நகர், 14. மணலி சாலை (பாயிண்ட்), 15. அன்னை சத்யா நகர், 16. எழில் நகர் பி பிளாக்,

17. அண்ணா சிலை, 18.தொப்ப விநாயகர் கோவில் தெரு.

பெரம்பூர் 12.30 மணி

1. டி.எச்.ரோடு வழியாக எம் ஆர் நகர் சீலம் பேக்கரி (வரவேற்பு) , 2.எத்திராஜ் சுவாமி சாலை, 3. இ.எச். ரோடு, 4. வியாசர்பாடி மார்க்கெட், 5. மேல்பட்டி பொன்னப்பன் தெரு, 6. பி.பி. ரோடு வழியாக, 7. ஏ.ஏ.ரோடு வழியாக பெரம்பூர் பஸ் நிலையம்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். டி.சேகர், ஜே.ஜே. எபினேசர், ஐட்ரீம் ஆர். மூர்த்தி உட்பட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் பாண்டியநல்லூர்ஊராட்சியில் அனைத்துகிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில்ரூ.12.61லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையகட்டிடத்தின் கல்வெட்டை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டைஆர்.காந்தி திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி, சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். முனிரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் நாகராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் கல்யாணி மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2023) சென்னையில் நடைபெற்ற டெக்கன் கிரானிக்கல் நாளிதழின் முதுநிலை செய்தியாளரும், சென்னை நிருபர்கள் சங்கத்தின் செயலாளருமான டி. சேகரின் மகள் டாக்டர் எஸ். சௌமியா டாக்டர் எஸ். வினோத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத - தொழிலாளர் விரோத - விவசாய விரோதப் போக்கைக் கண்டித்து

# அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில் மாபெரும் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்!

## மு.சண்முகம் தலைமையில் தொ.மு.ச. உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் பங்கேற்பு

சென்னை, நவ. 26 -

மத்திய தொழிற்சங்க அமைப்புகள், தொழில் வாரியான தொழிற்சங்க அமைப்புகள், இதர தொழிலாளர் அமைப்புகள் மற்றும் அனைத்து விவசாய அமைப்புகள் இணைந்து அகஸ்ட் 24 அன்று தலைநகர் புதுடெல்லியில் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில், ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத கொள்கையைக் கண்டித்து அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் நவம்பர் 26, 27 ஆகிய நாட்களில் சென்னை இராஜரெத்தினம் ஸ்டேடியம் அருகில் மாபெரும் பெருந்திரள் அமர்வு போராட்டம், தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தலைமையிலும், அனைத்து தொழிற்சங்கத் தலைவர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள், மாநில தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள் பங்கேற்கின்றனர்.

**கோரிக்கைகள்**

1) விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து! உணவு, மருந்துகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி.யை நீக்கு!! பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு மீதான மத்திய கலால் வரியை கணிசமாகக் குறைத்திடு!!! 2) மூத்த குடிமக்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்களுக்கு, கொரோனா என்ற சாக்குப் போக்கில் பறிக்கப்பட்ட ரயில்வே சலுகைகளைத் திரும்ப வழங்கு! 3) உணவுப் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளித்திடு! பொதுவிநியோக முறையை விரிவாக்கி செயல்படுத்து! 4) இலவச கல்வி, சுகாதாரம், தண்ணீர் மற்றும் உடல் நலஉரிமை அனைவருக்கும் வழங்குவதை உறுதிப்படுத்து! தேசியக் கல்விக் கொள்கை, 2020ஐ ரத்து செய்! 5) அனைவருக்கும் வீடு வழங்கப்படுவதை உறுதிசெய்! 6) வன உரிமைச் சட்டத்தை (குசுஹ) கறாராகச் செயல்படுத்து! வனங்களை அழிப்பதை அனுமதிக்கும், வன (பாதுகாப்பு) சட்டம், 2023க்கான திருத்தங்களைத் திரும்பப் பெறு! 7) உழுபவருக்கே நிலம் சொந்தம் என்பதை உறுதிப்படுத்து! 8) தேசிய குறைந்த பட்ச ஊதியம், மாதத்திற்கு ரூ.26,000/ என நிர்ணயம் செய்! 9) இந்திய தொழிலாளர் மாநாட்டை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனே நடத்து! குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடத்தப்படுவதை உறுதி செய்!!

10) பொதுத்துறை நிறுவனங்கள், அரசு துறைகளை தனியார் மயமாக்குவதை உடனேநிறுத்து! தேசிய பணமாக்கல் திட்டத்தை ரத்து செய்!! கனிமங்கள் மற்றும் உலோகங்கள் சுரங்கம் தொடர்பான தற்போதைய சட்டத்தில் திருத்தம் செய்து, நிலக்கரி உள்ளிட்ட சுரங்கங்களில் இருந்து கிடைக்கும் லாபத்தில் 50ரூ பங்கு, உள்ளூர் சமூகங்கள், குறிப்பாக ஆதிவாசிகள் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படுவதை உறுதி செய்!

11) மின்சாரம் (திருத்த) மசோதா, 2022ஐ திரும்பப் பெறு! முன்பணம் செலுத்தும் வகையில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்தாதே!!.

12) வேலை செய்வதற்கான உரிமையை அடிப்படையாக்கு! அனுமதிக்கப்பட்ட பணியிடங் களை நிரப்பி வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கு!!

13) மகாத்மாகாந்தி கிராமப்புற வேலைஉறுதி சட்டத்தின்படி, ஆண்டுக்கு 200 நாட்கள் வேலை மற்றும் நாளொன்றுக்கு ரூ.600/ ஊதியம் வழங்கும் வகையில் திட்டத்தை விரிவாக்கி செயல்படுத்து! நகர்ப்புறத்துக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் வகையில் மாற்றி அமைத்து அமலாக்கு!!

14) விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் மின்சாரத்திற்கான மானியத்தை அதிகரித்திடு! விவசாயிகளின் விளைபொருட்களை கொள்முதல் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி, விவசாயச் செலவைபோல் 50ரூ அதிகவிலையும், குறைந்த பட்ச ஆதார விலையும் வழங்கிட சட்டபூர்வ உத்தரவாதம் கொடு!! செலவுகளை மட்டுமே யோசித்துக் கொண்டிராமல், விவசாயிகள் தற்கொலையை தடுத்திட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திடு!

15) கார்ப்பரேட் நலன்களை பாதுகாக்கிற பிஎம்ஜ ஃபஸல் பீமா யோஜனாவை திரும்பப் பெற்று, ஒரு விரிவான பொதுத்துறை பயிர்க் காப்பீட்டை நிறுவு! பருவநிலை மாற்றம், வறட்சி, வெள்ளம், பயிர்சார்ந்த நோய்களால் ஏற்படும் இழப்புகளுக்கு, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கிடும் வகையில்அனைத்துபயிர்களுக்கும்காப்பீடுதிட்டத்தைஅமலாக்கு!

16) அனைத்து பண்ணைக் குடும்பங்களையும் கடன் சுமையிலிருந்து விடுவிக்க, விரிவான கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்திடு!

17) வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தை நிறுத்தி வைப்பதற்காக, ஒன்றிய அரசு எழுதிக் கொடுத்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்து! சிங்கு எல்லையில் போராடி உயிர்நீத்த தியாகிகளான அனைத்து விவசாயி களுக்கும் நினைவிடம் எழுப்பு! அவர்களது குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு, மறுவாழ்வளிக்க நடவடிக்கை எடு! நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெறு! ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய்மிஸ்ரா டேனியை தண்டனைக்கு உள்ளாக்கு!

18) நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் திரும்பபெறு! 19) குறித்த கால வேலைநியமனம் (ஃபிக்சட் டெர்ம் எம்பிளாய்மெண்ட்) முறையை ரத்துசெய்! சூவலையில் சம ஊதியத்தையும் பணியின் போது பாதுகாப்பையும் உறுதிசெய்! கேஷுவல் முறையை முற்றாக ரத்து செய்!

20) வீட்டிலிருந்து பணிபுரியும் தொழிலாளர்கள், நடைபாதைவியாபாரிகள், குப்பை பொறுக்கு பவர்கள், வீட்டுவேலைத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், திட்டப் பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கடைகள், நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், ஜிக் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், பதநீர் கள்இறக்கும் தொழிலாளர்கள், ரிக்க்ஷh, மாட்டுவண்டி தொழிலாளர்கள், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்கள், தாயகம் திரும்பிய வர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் போன்ற அனைத்து வகை அமைப்புசாரா தொழிலாளர்களையும் பதிவு செய்து, ஓய்வூதியம் உட்பட விரிவான சமூகப் பாதுகாப்பு திட்டங்களை உருவாக்கு! இவர்கள் ஒரே தொழிலை நீண்டகாலம் செய்யமுடியாமல் வேறொரு தொழிலுக்கு மாறுபவர்கள் என்பதால், அந்தந்த தொழில்களுக்கான நலவாரியங்களில் இருந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இயல்பாக எளிதில் மாறிக்கொள்ள பொருத்தமான வழிவகை செய்!

21) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலவாரியத்தில் இருந்து நிதி பங்களிப்போடு இ.எஸ்.ஐ. திட்டத்தை செயல்படுத்து! இஷ்ரம்போர்ட்டலில் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் மருத்துவ வசதி, மகப்பேறு, ஆயுள் மற்றும் ஊனத்திற்கான காப்பீட்டை உறுதிசெய்!

22) வீட்டில் இருந்து பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டுவேலைத் தொழிலாளர்கள் பற்றிய ஐஎல்ஓ இணக்க விதிகளை அங்கீகரித்து, பொருத்தமான சட்டங்களைஉருவாக்கு!

23) புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய விரிவான கொள்கையை உருவாக்கி, தற்போதுள்ள மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு ஒழுங்குமுறை) சட்டம்1979ஐ வலுப்படுத்தி விரிவான சமூகபாதுகாப்பு விதிகளோடு செயல்படுத்து!

24) புதிய ஓய்வூதிய திட்டத்தை முற்றாக கைவிட்டு, பழைய ஓய்வூதிய திட்டத்தை மீட்டெடுத்து, அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பை வழங்கு!

25) பெரும்பணக்காரர்களுக்கு வரி விதித்திடு! கார்ப்பரேட் வரியை அதிகப்படுத்து! ரத்து செய்யப்பட்ட, செல்வவரி மற்றும் வாரிசு வரியை மறுபடியும் அமுலாக்கு!

26) கருத்து சுதந்திரம், கருத்தில் வேறுபடும் உரிமை, மத சுதந்திரம், பன்முகத்தன்மை கொண்ட பண்பாடுகள், மொழிகள், சட்டத்தின்முன் அனைவரும் சமம், நாட்டின் கூட்டாட்சி முறைமை போன்ற அரசியல் சாசனத்தில் அடிப்படை விழுமியங்கள் மீதான தாக்குதலை நிறுத்து!

இவ்வாறு கோரிக்கைகள் வைக்கப்பட்டன.



சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டை முன்னிட்டு நடைபெற்ற காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி, பகுதி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் செயற்குழுக் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.